
# மானுடம்

சிற்றிதழ் - 7



**பருவகாலம்......**

பட்டுப்
போனோமா?
பூ -காய்-கனி
இலை-கிளை-வேர்
அத்தனையும்
இழந்தோமா?
இல்லை...
இல்லை...
பருவகால
மாற்றமிது
துளிர்விடுவோம்
மீண்டும்
விருட்சமாவோம்
நிழலும்
தருவோம்

- சிசு -

ஆசிரியர்
திருமலை சுந்தா

10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவலமாய்
வாழ்பவன்
சபலமாய் சாவான்

அட்டைப்படம் : பிரபா



நேர்மை - பொறுமை
மானுட நேயம்

மானுடம்

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் - 7

2009 - ஆடி

## இதழில்....


- மனிதம்.....
- ஞானத்தீ
- கிண்ணியா நஸ்புள்ளாஹ் கவிதைகள்
- நுரையீரல் பாதிப்பைக்.....
- சொல்லத்தான் நினைக்கிறேன்
- நினைவில் நிற்கும்....
- தமிழ் இலக்கிய...


ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



# ஆசிரியரின்....

மானுடம் சிற்றிதழ்:7 உங்களின் கரங்களில் தவழுகின்றது.

மானுடத்திற்கு ஆக்கங்கள் தேடிவரத் தொடங்கி விட்டன. படைப்பாளிகளின் நேசக்கரம் எம்மை பிரமிக்க வைக்கின்றது.

'மானுடம்' ஒரு இலக்கினை நோக்கி பயணத்தை ஆரம்பித்த சிற்றிதழ் எழுதிய எல்லா வற்றையும் மானுட பக்கங்களை அலங்கரிக்க பயன்படுத்த முடியாது.

எழுதியவற்றை பலமுறை படித்து திருப்தி அடைந்த பின்னரே பிரசுரத்திற்கு அனுப்புங்கள். தொடர்ந்தும் எழுதுங்கள்.

அடுத்த இதழில் காலாற அமர்ந்திருந்து 'மானுடம்' பேசுவோமே!


அச்சு: அஸ்ரா பிரின்டர்ஸ்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்!

சுதந்திரன்

1



அட மனிதா வாடா, நீ
'ஆர் – சொல்?' எனக் கேட்டேன்!
மட மனிதன் 'தமிழ்' என்றான்!
மகத்தான 'இந்து' என்றான்!
விடமுடியாமல் 'சிவம்' என்றான்!
'வெண்ணீறு' எனச் சொன்னான்!
'வடக்கு' என்றான், 'கரை' என்றான்,
'வல்வெட்டித்துறை' என்றான்!
போதும் நிறுத்தப்பா,
புகழ்பூத்த மானிடனே,
காதும் கடிக்கிறதே,
'கன' மாகச் சொல்லி விட்டாய்!
இத்தனை நாளாக
இதனையே வாய்பாடாய்க்
கத்திக் களைத் தாயே,
கடைசியிலே என்ன கண்டாய்?
'மனிதன்' என வந்து
மறவா இனம் கூறி
இனத்திற்கு அடையாளம்
இட்டுமே காத்தாயே,
வாழ்வு நிலைத் ததுவா?
வரம் ஏதும் கிட்டியதா?
தாழ்வொன்றும் வாராமல்
தடைபோட்டு வென்றாயா?
ஊரெல்லாம் தப்பியதா?
உன் இனத்தார் வாழ்ந்தாரா?
பாரெல்லாம் போற்றியதா?
பாசம் தழுவியதா?
சாதி தொலைந்தது வா?
சமயம் மேல் ஓங்கியதா?

நீதி நிலைத்ததுவா?
நிம்மதிகள் கிட்டினவா?
உண்மை பிறந்ததுவா?
உரிமை நிறைந்ததுவா?
நன்மை கிடைத்ததுவா?
நலமாய் நாள் ஓடியதா?
இல்லை எனில் பிறகேன்
இத்தகைய கோட்பாட்டில்
அல்லும் பகலும் என
அலைந்து கெடுகின்றாய்?
ஆறுதலாய் யோசி
அட மனிதா, சிந்திப்பாய்!
மாறு அப்பா, மாறு நீ
மனிதனாய் மாறி விடு!
நல் மனித நேயம் கொள்!
நடுநிலைமை தனைப் பற்று!
வெல்வாய் அது போதும்,
வேறொன்றும் தேவையில்லை!

– கவி முழங்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானத்தீ

கவிஞர் வைரமுத்து

நெருப்பின் அம்சம்
நாமெல்லாம்

வெளிச்சம் அறிவு
வெப்பம் உழைப்பு

அணைதல் என்பது
அடங்குதலன்றி
அழிதல் இல்லை
வேளை வந்தால்
விழித்தெழுவோம்

முதலைகள்போல் நாம்
கண்கள் திறந்தே உறங்குவோம்

எவரும் உரசினால்
பரபரவென்று பற்றுவோம்!
திசைகள் எல்லாம்
இடம் மாறும்படி
திடுக்கிட வைப்போம்!

முடியும் நம்மால்
நெருப்பின் அம்சம்
நாமெல்லாம்

சூரிய நெருப்பில்
நழுவிய துளியே பூமி
நழுவிய துளியில்
சிதறிய பொறிகள் நாம்

பற்றுதல் பரவுதல்
நெருப்பின் லட்சணம்

சரி!
சுடச்சுட யோசிப்போம்!


நெருப்பின் பொதுப்பண்பு
உலகெல்லாம் ஒன்றென்றால்
மேற்கு எப்படி
ஒளி காட்டியது?
கிழக்கு எப்படி
இருள் காட்டியது?

சற்றே
முதுகுப் பக்கம்
முகம் திருப்புவோம்

நெருப்பை அழுக்குச் செய்த
ஜாதி நம் ஜாதி

நெருப்புக்கு ஜாதி சொல்லி
நெருப்பையே எரித்தோம்
நெருப்புக்குப் பெயர் வைப்பதில்
நூற்றாண்டுகள் எரித்தோம்

நெருப்பு கண்டு
வியந்தவன் தீ என்றான்
பயந்தவன்
பகவான் என்றான்
யோசித்தவன்
திரியில் அடக்கி தீபமென்றான்



சரியாய் எரித்த நெருப்பை
ஒருவன்
தப்புத்தப்பாய் வேலைவாங்கினான்

குளிர்காய - விலங்குவிரட்ட
சமைக்க-சைகை புரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிசெய்ய - களிமண்சுடப்
பயன்பட்ட நெருப்பை
கற்பைக் கண்டறியும் தர்மா மீட்டராய்
அமுத்திச் செய்தான் அயோத்தி மன்னன்

பிறகந்த நெருப்பு
'வருணச்' சந்தைகவில்
உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டது
மலிவு மனிதர்க்கு மறுக்கப்பட்டது

நல்லவேளை!
நெருப்பைத் தேடி வெளியே அலையாதே
உனக்குள்ளே உண்டென்று
ஒருத்தி சொன்னாள்

கல்-மூங்கில்-கந்தகம்
மட்டுமன்றி
இறுகிக் கடந்ததைத்
திருகி எரிந்தாலும் தீப்பற்று மென்றாள்
தணலின் புத்திரி தஞ்சாவூர்த் தமிழிச்சி

பிறகே தெரிந்தது
நெஞ்சுக்குள்ள யாவர்க்கும்
நெருப்புண்டு என்று

முன்னே இதை அறிந்த மேற்கு
கிழக்கானது
மூடிக்கிடந்த மூடக்கிழக்கு
மேற்கானது
அறிவின் கங்குகள்
அணையவில்லை இன்னும்

மதம் அடித்த மணல்
அந்நியர் வீசிய தண்ணீர்
உள்ளூர் ஜாதிக்காற்று
இத்தனைக்கும் அணையாமல்
எங்கள் நெருப்பின் வேர்
எங்கோ இருக்கிறது.

எல்லோரும் சேர்ந்து நம்
உயிரக்காற்று ஊதுவோம்

ஞானத்தீ எழுப்புவோம்!
காற்றுக்கேது
வடக்கு தெற்கு?
நெருப்புக்கேது
கிழக்கு மேற்கு?

ஒன்று மட்டும் புரிந்தது நமக்கு
உள்ளே நெருப்பு
இல்லாதவர்க்கு
சூரியனும் ஒரு கரித்துண்டு

உள்ளே நெருப்பு
உள்ளவருக்குக்
கரித்துண்டும் ஒரு சூரியன்.

## கிண்ணியா ஏ. நஸ்புள்ளாஹ் கவிதைகள்

ரசிகர்களை அழவைக்க காட்சி அமைக்கும்
அந்த டைரக்டர் வீட்டில்...
அழுதுகொண்டிருக்கிறாள் துணை நடிகை

* * * *

வெளிநாடு போன தந்தை
ஆசையாசையாக கொழுசு வாங்கி வந்தான்
சாய்வு நாற்காலியில் காலில்லாத குழந்தை

* * * *

ஊழல் குற்றச்சாட்டின் பெயரில்
சிறைத் தண்டனை அனுபவித்துக்
- கொண்டிருக்கிறான்
சிறைச்சாலை அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுரையீரல் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் தக்காளி

சிகரட் பிடிப்பவருக்கு, சிகரட்டால், நுரையீரலில், 'எம்ப சேமியா' என்ற இரசாயனம் சேருகிறது. அதனால் தான் நுரையீரலில் பாதிப்பு வருகிறது. நுரையீரல் அரித்துப் போய், கடைசியில் பாதிப்பு ஏற்படுகிறது. இதை, தக்காளி தடுக்கிறது. அதில், 'லிகொபென்' என்ற சத்து உள்ளது. சிகரட் மூலம் ஒருவரின் நுரையீரலில் சேரும், எம்பசேமியா' இரசாயனத்தை, அப்புறப்படுத்தி விடுகிறது லிகோ பென். இதனால் நுரையீரல் திசுக்கள் பாதுகாக்கப்படுகிறது.



உங்களுக்கு சிகரட் பிடிக்கும் பழக்கம் உள்ளதா? 'ஊதுவதை விடவே முடியவில்லையா? அப்படியானால் தக்காளி ஜூஸ் குடிக்க பழகுங்கள்! என்ன முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சு போடுகிறீர்கள் என்கிறீர்களா?

'தக்காளி ஜூஸ் குடித்து வந்தால், நுரையீரல் எந்த பாதிப்பும் இல்லாமல் இருக்கும்!' என்கிறது. புதிய ஆராய்ச்சி ஒன்று. ஜப்பானில் உள்ள, 'ஜுன்டென்டோ' மருத்துவ பல்கலைக் கழகத்தில் உள்ள குனேகி சமேயா என்ற மருத்துவ நிபுணர் தலைமையிலான குழுவினரின் ஆராய்ச்சியில் பல மருத்துவ உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு அறிக்கையில் சொல்லப்பட்ட உண்மைகள்:**

சிகரட் பிடிப்பதால், 'எம்ப சேமியா' சேர்ந்து நுரையீரல் பாதிக்க காத்திருந்தாலும், தினமும் தக்காளி ஜூஸ் குடித்து வந்தால், அதில் உள்ள, 'லிகோபென்' சத்துக்கள், நுரையீரலில் உள்ள, 'எம்பசேமியா'வை நீக்கி விடுகின்றன. நாங்கள் இதை பரிசோதனை செய்ய நினைத்த போது சுண்டெலிகளுக்கு சிகரட் புகையை செலுத்தி, தக்காளியில் உள்ள 'லிகொபென்'னை செலுத்தி பரிசோதித்துப் பார்த்தோம். சோதனை, வெற்றிகரமாக முடிந்தது. சுண்டெலி நுரையீரலில் உள்ள 'எம்ப செமியா' அப்புறப்படுத்தப்பட்டது தெரியவந்தது.

> சிகரட் பிடிப்பவருக்கு, சிகரட்டால், நுரையீரலில், 'எம்பசேமியா' என்ற இரசாயனம் சேருகிறது. அதனால் தான் நுரையீரலில் பாதிப்பு வருகிறது. நுரையீரல் அரித்துப் போய், கடைசியில் பாதிப்பு ஏற்படுகிறது.

இதனால், மனிதர்களுக்கும் பரிசோதனை செய்து வெற்றி கண்டோம். இது மட்டுமன்றி, தக்காளியில் உள்ள, 'லிகோபென்' சத்துக்கள், இதய பாதுகாப்புக்கும் நல்லது. நீங்கள் சிகரட் பிரியரா? அப்படியானால், தக்காளி ஜூஸில் இன்றே இறங்கி விடுங்களேன்!

- நன்றி வீரகேசரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லத்தான் நினைக்கிறேன்

**5**

– ப. மனோகரன் –



பிறர் தன்னை வியந்து போற்ற வேண்டும். தன்னிடம் அமைந்துள்ள சிறந்த குணங்களுக்காகத் தன்னைப் பிறர் வியந்து போற்ற வேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவரிடமும் வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்திலிருந்தே இருப்பது இயற்கை, பிறர் தன்னை போற்ற வேண்டும் என்ற ஆசை நிறைவேற்றப்படுமேயானால் பிறகு வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங்களைத் தேடிக்கொள்வது அவருக்குச் சாத்தியமாகும்.

இந்த ஏக்கம் தீரவில்லை என்று வைத்துக் கொள்வோம். அதாவது, ஒருவரது நல்ல குணங்களையும், சிறந்த காரியங்களையும் நாம் பாராட்டக் கூடிய சாதனைகளையும் வியந்து போற்ற யாருமில்லை

## முழுமனத்தோடு பாராட்டுங்கள்

என்றால் பிறகு அந்த மனிதர் தீயவர்களின் வலையில் விழுந்துவிடக் கூடிய அபாயம் உள்ளது. போலியான புகழ்ச்சி மூலம் அவரைக் கவர்ந்து அதற்கு விலையாக ஆர்ப்பாட்டங்களிலும், கலகங்களிலும் வன்முறையிலும் கூட அவரை ஈடுபட வைத்தவிடுவார்கள்.

எந்தக் குணங்களும் செயல்களும் வியந்து போற்றப்படுகின்றன என்பதைப் பொறுத்து, வாழ்க்கையையே மாற்றிவிடக்கூடிய ஒரு நல்ல, அல்லது கெட்ட திருப்பமாக இந்த உள்மனத் தேவை அமைய ஏதுவுண்டு.

ஆக்க சக்தியாளர் என்ற முறையில் வியந்து போற்றுவது என்னும் உத்தியை நல்ல முறையில் பயன்படுத்துங்கள். உயர்ந்த இலட்சியங்களையும் சிறந்த சாதனைகளையும் அடையுமாறு உங்கள் சொந்த உலகத்திலுள்ள மனிதர்களை ஊக்குவிப்பீர்கள்.

ஒவ்வொரு மனிதருடனும் ஒவ்வொரு முறைபேசும் போதும் அல்லது எழுதும் போதும் அவரது நற்குணங்களையும் சாதனைகளையும் உடைமைகளையும் வியந்து போற்ற வேண்டும் என்பது வெளிப்படை. இதை எப்போதாவது ஒருமுறை செய்து பயனில்லை. ஒவவொரு முறையும் செய்ய வேண்டும். ஒவ்வொரு தடவையும் ஒரு நீண்ட பாராட்டுப் பட்டியல் வாசிப்பது என்பது இயலாத காரியம் தான். மனப்பூர்வமாக ஏதேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையாவது கட்டாயம் புகழ்ந்து பேச வேண்டும். எவருடன் உரையாடினாலும் அல்லது யாருக்குக் கடிதம் எழுதினாலும் ஒரு பாராட்டு வாக்கியத்தோடு தான் முடிக்க வேண்டும்.

முழுமனத்துடன் வியந்து போற்றுவது எப்படி என்பதை ஆராய்வோம்.

இருவழிகள் உண்டு

1. செயல் மூலம் உங்கள் வியப்பைத் தெரிவிக்கலாம்.

உங்கள் வியப்பைக் கண்கூடாகக் காட்டலாம். பல ஆண்களுடைய கவனத்தைக் கவர்ந்த ஓர் அழகிய பெண்ணிடம் அவர் அழகை அவர்கள் வியந்து போற்றுகிறார்கள் என்று சொல்ல வேண்டிய தேவை இல்லை.

அழகிய பெண்கள், கவர்ச்சியான ஆண்கள், மற்றும் சுவாரசியமான ஈர்ப்புச் சக்தியுள்ள ஆண், பெண்கள் இவர்களை மட்டுமே கண்கூடாக வியக்க வேண்டும் என்பது கிடையாது. சில பொருட்களை நாம் பார்க்கும் பார்வையிலேயே அந்த வியப்பு வெளிப்படையாகத் தோன்றக் கூடும்.

சிலரது உண்மைகள்

வித்தியாசமாகவும் வனப்புடனும் இருக்கும். அந்தப் பொருட்கள் குறித்து அவர்கள் கர்வம் கொண்டிருக்கக் கூடும் அவற்றை யாரேனும் பார்த்து வியக்கிறார்கள் என்று வெளிப்படையாகத் தெரியும் பட்சத்தில் அவர்கள் அதைக் கவனிக்கத் தவறமாட்டார்கள் மகிழ்ச்சி கொள்வார்கள். நன்றி பாராட்டுவார்கள். சும்மா உட்கார்ந்திருக்காதீர்கள். எழுந்து போய்க் கலையழகு மிகுந்த, அல்லது வேறு வகையில் (குறிப்பிடத்தக்க) அந்தப் பொருளைக் கூர்ந்து கவனித்து உங்கள் வியப்பையும் புகழ்ச்சியையும் காண்பியுங்கள்.

2. உங்கள் பாராட்டை பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் தெரிவியுங்கள்.

உங்கள் தோற்றத்தால் காட்டுகின்ற பாராட்டைத் தவிர வார்த்தை வழியாகத் தெரிவிக்கின்ற பாராட்டும் உண்டு. வெளிப்படையாகவும், முழுமனத்தோடும், "உங்களுடைய (பொருளைக் குறிப்பிட்டு) நான் பெரிதும் வியக்கின்றேன்"..... அல்லது "நீங்கள் சொன்னது அருமையான யோசனை!".... அல்லது அற்புதமாகச் செய்திருக்கிறீர்கள்!".... அல்லது "உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்!" என்று கூறுங்கள்.

நீண்ட பிரசங்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை. சொல்லப் போனால் அப்படிச் செய்யாமல் இருப்பதே நல்லது. நாலுபேருக்கு மத்தியிலும் சரி மனோதத்துவ ரீதியிலும் சரி, அடித்தளத்திலிருந்து வருகின்ற ஒருசில பாராட்டு வார்த்தைகளே மிகுந்த பலனளிக்கும் சிலருக்கு, பாராட்டுக்குரிய தன்மைகள் சற்றுக் கூடுதலாக இருக்கக்கூடும். சிலருக்குக் குறைவாக இருக்கக்கூடும். அது இயற்கை. ஆனாலும் நீங்கள் வியந்து போற்றக் கூடிய ஒரு குணத்தை (அல்லது பல குணங்களை) நீங்கள் முயன்று கண்டு பிடிக்க வேண்டும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாராட்ட வேண்டும் என்பது உங்களுக்கு ஞாபகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் போய்விடக்கூடும் அதுதான் பிரச்சினை.

அதற்கு, 'சபாஷ் விளையாட்டு' என்று பெயர். அதன் விதிமுறைகளை நீங்கள் பின்பற்றுவீர்களேயானால், வாய்ப்பு எழும்போதெல்லாம் ஒவ்வொரு மனிதரையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் தவறாமல் பாராட்டிவிடுவீர்கள்.

"சபாஷ் விளையாட்டை" ஆடுகின்ற முறை இதுவே.

1. உங்களுக்கு நீங்களே சவால் விட்டுக் கொள்ளுங்கள். "நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடமும், உண்மையிலேயே வியந்து பாராட்டக்கூடிய குணம் ஏதாவது ஒன்றையேனும் கண்டுபிடிக்கப் போகின்றேன்" என்று.

2. அவரிடத்தில் (ஆண் அல்லது பெண்) நீங்கள் கண்ட குணம் குறித்து நேரிடையாகவும் மனப்பூர்வமாகவும் பாராட்டுத் தெரிவியுங்கள். (விளையாட்டு விதிகளின் படி, ஒரு மனிதரை ஒரே நாளில் பலமுறை சந்திக்க நேர்ந்தால் ஒவ்வொரு முறையும் பாராட்ட வேண்டிய அவசியம் கிடையாது. ஒரு தடவை பாராட்டினால் போதும். ஆனால் பொருத்தமாக இருந்தால் எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம்)

3. பல நிமிடம் ஒருவரோடு பழக நேரிட்ட பின்னரும் அவரை நீங்கள் முழுமனத்துடனும் வெளிப்படையாகவும் பாராட்ட ஒரு வாய்ப்பும் கிடைக்கவில்லை என்றால் விளையாட்டில் நீங்கள் தோற்றவர் ஆவீர்கள். உங்கள் பர்ஸிலிருந்து ஐந்து ரூபாய் எடுத்து ஒரு டப்பாவிலோ உண்டிப் பெட்டியிலோ போட்டு வையுங்கள். பணம் சேர்ந்தவுடன் இந்த "அபராதக் கணக்"கில் சேர்ந்த பணத்தை வங்கியில் ஒரு தனிக் கணக்குத் திறந்து அதில் போடுங்கள்.

வாழ்க்கையின் மிக முக்கிய பாடங்களில் ஒன்றைக் கற்றுக் கொண்டவர் ஆவீர்கள். வியந்து பாராட்டத்தக்க தன்மை ஒன்றையேனும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் உண்டு என்ற உண்மையை உணர்ந்தவர் ஆவீர்கள்.

உங்களுடைய சகவாசத்தை மக்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள்.

ஏனெனில், உற்சாகப்படுத்தக்கூடிய பாராட்டை நீங்கள் தருவீர்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். பாராட்டுக்காக ஏங்கும் அவர்களது உள்மனம், உங்களது புகழ்ச்சியையும் அதனால் நிகழக்கூடிய பொலிவையும் எதிர்பார்த்து நிற்கும்.

நீங்கள் உங்கள் செல்வாக்கை எக்கச்சக்கமாகக் கூட்டிக் கொள்வீர்கள்.

உங்கள் ஆக்கச்சக்தியைப் பெரிதும் பெருக்கிக் கொள்வீர்கள்.

**இது..... நான் படித்து பாதுகாத்து உங்களின் சிந்தனைக்கு தருவது.**

–தொடரும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்கும் தர்மு சிவராமு

–இராஜ. தர்மராஜா–



சிறுகதையின் திருமூலர் என விபரிக்கப்பட்ட மௌனியின் சிறுகதைத் தொகுப்பிற்கு முன்னுரை வழங்கியதன் மூலம் பெரிதும் வெளித் தெரிந்தவர்தான் தர்மு. சிவராமு எனப்படும் சிவராமலிங்கம்.

சிவராமலிங்கம் என்ற பெயரையுடைய தர்மு சிவராமுவிற்கு பல புனைபெயர்கள் உண்டு. பானு, அரூப் சிவராம், அஜித் ராம, பிரேமிள் என அனேக பெயர்களில் காலத்துக்குக் காலம் எழுதி வந்துள்ளார் சிவராம். எத்தனையோ பெயர்களில் எழுதி வந்தாலும் தர்மு சிவராமு என்ற பெயரே அவருடன் நிலைத்து நின்றது எனலாம். 20–04–1939ல் பிறந்த தர்மு சிவராமு 06–01–1997ம் ஆண்டு இயற்கை எய்தினார். இவ்வுலகில் அவர் வாழ்ந்த காலடம் ஐம்பத்தி எட்டு ஆண்டுகள் மட்டுமே.

சி.சு. செல்லப்பாவின் எழுத்து சஞ்சிகையில் தனது இருபதாவது வயதில் எழுத ஆரம்பித்ததன் மூலம் பலரின் கவனத்தைப் பெற்றார். சிறுசஞ்சிகைகளிலேயே பெரிதும் எழுதி பலரின் கவனத்தை பெற்றார். கவிதையே பெரும்பாலும் இவரின் படைப்புலகமாக இருந்தாலும் விமர்சனம், நாடகம், சிறுகதை, கட்டுரை எனப் பல தளங்களிலும் இவரது ஆற்றல் விரிந்து காணப்பட்டதுடன், நுண்கலைகளான சிற்பம், ஓவியம், பெயின்டிங் ஆகிய கலைகளிலும் தனது திறமையை காட்டி வந்துள்ளார்.

புதுக்கவிதை துறையில் இவர் படிமக் கவிஞர் ஆகப் புகழ் பெற்றார். கவித்துவம் பெற்ற இவர் கவிதைகள், பலரின் ஆன்மாவை விழித்தெழ வைத்தன. இதற்குக் காரணம் இவரின் ஆன்மீக வாழ்வு ஆகும். தர்மு சிவராமுவின் ஆன்மீக ஞானத்தை தட்டி யெழுப்பி விட்டவர்களாக சாது அப்பாத்துரை செட்டியாரும் திரு.ஜே. கிருஷ்ணமூர்த்தியும் விளங்கினர். தர்மு சிவராமுவின் ஆன்மீக வாழ்வு அவரது கவிதைகளிலும் பிரதிபலித்தது. இவர் ஆன்மீகக் கவிஞர் என்ற பெயரையும் பெறக் காரணமாயிற்று.

தர்மு சிவராமுவின் விமர்சன எழுத்துக்கள் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துவனவாகும். முகம் பார்த்து விமர்சனம் செய்வது என்பது இவரிடம் கிஞ்சித்தும் கிடையாது. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நக்கீரத்தனமான விமர்சனமே இவரின் விமர்சனமாகக் காணப்பட்டது. இதனால் இவரது நண்பர்களே இவரின் எதிரிகளாகவும் மாறிவிடுவதுண்டு. ஆனால், அது பற்றிக் கவலைப்படாமல் தயவு தாட்சண்யம் பாராது மிகவும் நேர்மையாகவும்,நறுக்காகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து விமர்சனம் எழுதி வந்தார்.

1968ம் ஆண்டு நகுலனால் தொகுத்து வெளியிடப்பட்ட "குருஷேத்ரம்" தொகுதியில் தர்மு சிவராமுவை, புகழ் பெற்ற மலையாள விமர்சகர் பி.கே. பாலகிருஷ்ணனுடன் ஒப்பிடுகிறார் நகுலன்.

மேலும் அவர், தர்மு சிவராமு 'எழுத்து' சஞ்சிகை மூலம் நமக்குக் கிடைத்த விமர்சகர் என்கிறார். "அவரது நடை சிந்தனைத் துடிப்பு மிக்கது; நுணுக்கமும் ஆழமும் உடையது. அவர் எழுத்த மேல் நாட்டு இலக்கியப் பரிச்சயத்தால் வளம் பெற்றது" என்கிறார்.

"இன்றைய தமிழ் இலக்கிய நிலையைப் பற்றி விமர்சன பூர்வமாக நிர்ணயிக்கும் முதல் கட்டுரை மௌனியின் கதைக்கு சிவராமு எழுதிய முன்னுரை என்கிறார் நகுலன் – (குருஷேத்திரம் –1968–மே)

இவரின் வாழ்வு ஒரு கலைஞனின் வாழ்வாகவே விளங்கியது. எழுத்தே கலையே தொழில் ஆக இறுதிவரை வாழ்ந்து மடிந்தவர்தான் தர்மு சிவராமு இவருக்கு சோதிடம், கைரேகை சாஸ்திரம், எண்சோதிடம் என்பன தெரிந்திருந்தும் தொழில் ரீதியாக அவற்றைப் பயன்படுத்தியவர் அல்லர். ஓவியம், பெயின்டிங், சிற்பம், எழுத்து, வாசிப்பு என்பனதான் அவரின் ஜீவித நித்திய வாழ்வு! வயிற்றுப்பாட்டுக்காக வேறு உத்தியோகம் என்பது அவரால் நினைத்தும் பார்க்க முடியாதது. இதனால் வறுமை என்பது அவரின் சொந்தம் ஆகிவிட்டதில் வியப்பு இல்லை! வெறும் தண்ணீருடன் கூட நாட்களைக் கடத்திவிடும் ஆன்மிக ஞானம் கொண்டவராக விளங்கினார். பிற்காலத்தில் யோகி ராம் சுரத்குமார் உடனும் பழகிவந்தார்.

இவர் எழுதிய நாடகங்களுள் "நட்சத்திரவாசி" இலங்கையிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டு புகழ் பெற்றது. பேராதனைப் பலகலைக் கழகத்திலும் மாணவர்களால் தமிழ் சங்க தமிழ் சங்க விழாவின்போது மேடையேற்றப்பட்டது என நினைக்கின்றேன். பின்பு அலைக்காற்றுக் கழகத்தினரால் திரு. பாலேந்திராவினாலும் நடித்து இயக்கப் பெற்றதாக ஞாபகம்.

பிரான்ஸ் நாட்டில் போய் வாழ வேண்டும் என்று வெளிக்கிட்ட தர்மு சிவராமுவின் வாழ்க்கை இலங்கையிலும், தமிழ் நாட்டிலுமாகவே கழிந்து விட்டது. தமிழ் நாட்டிலேயே பெரும்பாலும் வாழ்ந்து விட்டதனால் இவரை, தமிழக எழுத்தாளராகவே கணித்து விடுகின்றனர். ஆங்கிலத்திலும் இவர் எழுதி வந்தாலும் தமிழ் எழுத்துலகில் தான் இவர் ஆளுமை மிக்கவராகத் திகழந்து வந்துள்ளார். தமிழகத்தில் சில விருதுகளையும் பெற்று இருந்தாலும் பரிசு, புகழ், பாராட்டுக்கள் என்பன இவரைப் பாதிப்பதில்லை. தொடர்ந்தும் தன் இயல்பு நிலையிலேயே வாழ்ந்து காட்டியவர்கள் தர்மு சிவராமு!

பிற்காலத்தில் வாழ்வு அவருக்கு சில சங்கடங்களைக் கொடுத்தாலும், ஆன்மீகம் அவருக்கு வலிமையைக் கொடுத்து வந்தது. இறுதியாக வேலூர் அருகிலுள்ள கரடிக் குடியில்06–0–1997ல் இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்தார் என்ற போதிலும், தர்மு சிவராமுவின் கவிதைகள் அவருக்கு வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான தடத்தைப் பதித்துச் சென்றவர் தர்மு சிவராமு'

–சி. குருநாதன் –

வாழ்ந்த காலத்தில் தன்னை ஒரு பெரிய இலக்கியவாதியாகக் காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்து வரலாறாகியவர் அமரர் தர்மு சிவராமு என திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அமரர் தர்மு சிவராமுவின் ஞாபகார்த்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வித்தியாலய பிரதி அதிபர் சீ. மதியழகன் தெரிவித்தார்.

அமரர் தர்மு சிவராமுவின் 70ஆவது பிறந்த தினத்தன்று நடைபெற்ற இந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் காந்திப் பெரியார் பொ. கந்தையா, மூத்த குடிமகன் நாகராஜா கணபதிப்பிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். இளங்கவிஞர் சத்தியதேவன் அமரர் தர்மு சிவராமுவின் படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளர் சிவஞானச் செல்வர் செ. சிவபாதசுந்தரம் பேசும் போது;

அமரர் தர்மு சிவராமுவின் திறமையை கௌரவிக்க அன்னார் பிறந்த மண் திருகோணமலை தவறி விட்டது. ஆனால், அவருக்குரிய கௌரவத்தை தமிழகம் செய்துள்ளது. அமரர் தர்மு சிவராமுவின் இலக்கியப் படைப்புகள் தமிழ் நாட்டில் பாடப்புத்தகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அறிகிறோம் என்றார்.

கவிஞர் ஜபார் அங்கு உரையாற்றுகையில்,

அமரர் தர்மு சிவராமு பன்முக ஆளுமை மிக்கவராக உலக தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான தடத்தைப் பதித்துச் சென்றுள்ளார். தர்மு சிவராமுவின் அரசியல் முகம் பலருக்குத் தெரியாது. இலக்கியம் மற்றும் கவிதைக்கு அப்பால் தேசிய அரசியலிலும் அன்னாரின் பங்களிப்பு காணப்பட்டது. அன்னாரது ஆன்மீக முகம் 'தியானதாரா' நூல் மூலம் வெளிப்பட்டது. தேடுகின்ற சூழல் என்ன நடந்தது என்பது தெரியாத நிலை இவற்றின் மத்தியில் உயிர்ப்புடன் இருக்கின்றோம் என்பதை அமரர் தர்மு சிவராமுவின் நினைவு நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது.

நவீன கவிதைத் துறை வரலாற்றில் பாரதிக்குப் பின் பிச்சமூர்த்தி, கு.ப.ரா என்ற வரிசை, மூன்றாம் கட்டத்தில் அமரர் தர்மு சிவராமுவைத் தாண்டிச் செல்கிறது. திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு என்று நிற்காது தமிழகத்தை நோக்கி அவர் சென்றுள்ளார். தர்மு சிவராமு உலகளாவிய கவிஞராக அறியப்பட்டவர். 13 வயதில் எது ஆன்மீகம்? என்று சூனியத்தைத் தேடிப் புறப்பட்டவர் என்றார்.

மூத்த எழுத்தாளர் "திருமலை சுந்தா" பேசும் போது:

'தலை சிறந்த தமிழ்ப் படைப்பாளி அமரர் தர்மு.சிவராமு. அன்னாரின் இலக்கியப் படைப்புகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். அடுத்த தலைமுறைக்கு அது பயன் தருவதாக அமையும்' என்றார்.

(நன்றி தினக்குரல் 11.05.2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org